யிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் உள்ள மக்களின் நலன் கருதி இந்தத் திட்டத்தை எடுத்து அடுத்த ஆண்டிலாவது செயல்படுத்த வேண்டுமென்று கூறிக் கொண்டு நமது தமிழக மக்கள் கர்நாடகம் சென்று பிழைக்கக்கூடிய நிலையும், அவர்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதாலும், இந்த திட்டத்தை அரேப்பாளையத்தில் கட்டினால் அங்கு பல ஆயிரக்கணக்கான குடிமக்கள் வாழ வசதி ஏற்படும் என்பதால் இந்த அரசு அடுத்த ஆண்டிலாவது இத்திட்டத்தை எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரேப்பாளையத்திலிருந்து மேற்கு நோக்கி ஓடும் ஓடையில் மேலும் சில ஓடைகளை இணைத்த பின்னர் அதன் கீழ்ப் பகுதியில் கர்நாடக மாநிலத்தில் சொர்ண நதி நீர்த் திட்டம் அமைக்கப்பட்டது. இந்நீர்த்தேக்கத்திற்கு நீர்வரத்து அதிகம் வராத காரணத்தாலே சுமார் 7 ஆண்டுகள் ஆகியும் கூட நீர்த்தேக்கம் நிரம்பவில்லை. அதன் பின்னாலே அதையோட்டியே சிக்கோடு நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து 3 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு ''லிங்க் சானல்'' வெட்டி, அதன் மூலம் தண்ணீர் கொண்டு வந்து அந்த நீர்த்தேக்கம் நிரப்பப்பட்டு, தண்ணீர் அளிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, நம்முடைய பகுதியிலே தண்ணீர் வரத்து அதிகம் இல்லாத காரணத்தாலே புதிய அணைத் திட்டம் ஏற்படுத்துகின்ற வாய்ப்பு ஆய்வு செய்யப்படவில்லை. இருப்பினும், உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அங்கு இருக்கின்ற நீர்வரத்துப் பகுதியினுடைய நிலைமையை அறிந்து, நம்முடைய பொதுப் பணித்துறை மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அந்தத் திட்டத்தினுடைய பலன் குறித்து ஆராய்ந்து அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 206, திரு. செ. ஆறுமுகம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

206—

மயிலம்—பாண்டிச்சேரி இணைப்புச் சாலையை அகலப்படுத்துதல்

*3758 திரு. செ. ஆறுமுகம் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வானூர் தொகுதி, வானூர் வட்டத்தில் மயிலம்-பாண்டிச்சேரி இணைப்புச் சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

1992 மார்ச் 13]

(ஆ) ஆம் எனில், அது எந்த ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயத் திருப்பணியை தம் உயிர் மூச்சாக ஏற்று இருக்கின்ற எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் ஆட்சியில், தொழில்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும், ஏன் ? தொழிலாளர்கள் புத்துயிர் பெற்று வாழ்கின்ற எங்கள் புரட்சித் தாய் ஆட்சியில் எனது வானூர் தனி தொகுதியில், வானூர் வட்டத்தில், மைலம்-பாண்டிச்சேரி ஒரு வழி தடங்கள் இணைப்புச் சாலை உள்ளது. சரித்திரப் புகழ் பெற்ற ஆலயங்களான மைலம் முருகன் ஆலயத்திற்கும், திருவக்கரை வக்கர காளியம்மன் ஆலயத்திற்கும் உலக நாடுகளில் இருந்து, இலட்சகணக்கான பக்தர்கள் நடந்தும், வாகனங்கள் மூலமும் வருகிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களிடம் இருப்பதை அப்படியே வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள். துணை வினாத் தொடர்பான கேள்வியைக் கேளுங்கள்.

திரு. செ. ஆறுமுகம் : அதுமட்டுமல்ல, கறுப்புக்கல் வெட்டியெடுக்கும் அரசு தொழிற்சாலைகளில் இருந்தும், தனியார் தொழிற்சாலைகளிலிருந்தும், சுமை லாரிகள், ஒரு வழித் தடங்களில் போவதால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு, உயிர்ச் சேதம் மிகுதியாக உள்ள காரணத்தினால், மைலம்-பாண்டிச்சேரி இணைப்புச் சாலையை அகலப்படுத்தி, இரு வழித் தடங்களாக ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது மைலம்-பாண்டிச்சேரி கி.மீ. 132/4, 164/3 என்ற பெயரில் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்ற ஒரு பெரிய மாவட்டச் சாலையாகும். இந்தச் சாலை ஏறத்தாழ 31 கி.மீ. நீளம் உடையது. ஏறத்தாழ 5.3 கி.மீ. ஒரு வழிச் சாலையாக அது உள்ளது. அதை மேலும் இருவழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்றால் 15 இலட்சம் செலவு ஆகும். ஒரு வழிச் சாலையை இரு வழிச் சாலையாக மாற்றுவதற்கு குறைந்த பட்சம் 2,200 பயணியர்

வாகன அளவு என்ற குறியீட்டை நாம் நிர்ணயித்திருக்கிறோம். அந்தச் சாலையில் அந்தக் குறியீட்டை நாம் எட்டவில்லை. ஆகவே இருக்கின்ற ஒரு வழிச் சாலை முறையான வகையிலே இன்றைக்கு நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, அந்த ஒரு வழிச் சாலையே போதுமானது என்று அரசு கருதுவதால், அந்த ஒரு வழிச் சாலையை நல்ல முறையிலே பராமரித்து இடைஞ்சல் இல்லாமல் பார்த்துக் கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 207, திருமதி ரமணி நல்லதம்பி. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

207—

பாலம் பழுதுபார்த்தல்

*3843 திருமதி ரமணி நல்லதம்பி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ராதாபுரம் தொகுதி துரை குடியிருப்பு (கோனார்) மெயின் ரோட்டில் இருந்து வரும் நடைபாதையில் உள்ள பாலத்தை பழுதுபார்க்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 208, திரு. தேனி பன்னீர்செல்வம். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

208—

போடிநாயக்கனூர் தொகுதியில் சாலைகள் சீரமைப்பிற்கு அனுமதிக்கப்பட்ட தொகை.

*4026 திரு. தேனி பன்னீர்செல்வம்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) போடிநாயக்கனூர் தொகுதியில் இந்த நிதியாண்டில் சாலைகள் சீரமைப்பிற்காக அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) எந்தெந்த சாலைகளுக்கு எவ்வளவு அனுமதிக்கப்பட்டுள்ளது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS